(ஈ) பிக்கு, பிக்குணிகள் மற்றும் ஏனைய சமயத் தலைவர்களான புற்றுநோயாளர்களுக்குச் செய்யவேண்டிய மருத்துவ பரிசோதனைகள் உட்பட அனைத்து விசேடமான சிகிச்சைகளையும் எமது நிலையத்தினூடாக அபேக்ஷா வைத்தியசாலையுடன் இணைந்து, காலதாமதமின்றி நிறைவேற்றிக் கொடுப்பதற்குத் தேவையானவற்றை செய்தல்;

(உ) அபேக்ஷா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் புற்றுநோயாளர் பிக்கு, பிக்குணிகள் மற்றும் ஏனைய சமயத் தலைவர்களின் கண்ணியத்தைக் காப்பதற்கான மத்தியஸ்த்தர்களாக செய்படல்;

(ஊ) புற்றுநோயாளர்களுக்கான போசாக்குள்ள உணவு முறையொன்றின் மூலம் புற்றுநோயை சமப்படுத்தலாம் என்று தற்போதைய உலக சுகாதார நிலையம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதற்கிணங்க அவ்வாறதானதோர் போசாக்குமிகு உணவு வேளையை வழங்குவதன் மூலம் புற்றுநோயாளர் பிக்கு, பிக்குணிகளைப் பராமரிப்பதற்காக எமது நிலையம் முனைப்புடன் செயற்படுதல்;

(எ) பௌத்த பிக்கு, பிக்குணிகள் மற்றும் ஏனைய சமயத் தலைவர்கள் மத்தியில் எமது நிலையத்தின் முதற் கடமையாகக் கொண்டு புற்றுநோய் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தல்;

(ஏ) இன்றைய சமூகத்தினர் மத்தியில் நோயாளர் பராமரிப்பு சம்பந்தமாக முன்னுதாரணத்துடன் வழிகாட்டுதல்; மற்றும்

(ஐ) புற்றுநோய் அறிகுறிக்கான வாய்ப்பை முன்கூட்டியே அறிந்துகொள்வதற்கான ஆரம்பக்கட்ட பரிசோதனைகளுக்கு அவசியமான வசதிகளை வழங்குதல்.

(2) ஓராம் உட்பிரிவில் குறித்துரைக்கப்படும் குறிக்கோள்களின் அமுலாக்கலில், கூட்டுத்தாபனம், அத்தகைய அமுலாக்கலானது இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியற்கொள்கை, பிறப்பிடம் அல்லது ஏதேனும் அத்தகைய ஏதுக்கள் அடிப்படையிலான ஏதேனும் வேறுபாடின்றி நிறைவேற்றப்படுதல் வேண்டுமென உறுதிப்படுத்தல் வேண்டும்.

